[1975 அக்டோபர் 25

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருச்சி மாவட்டத்திலுள்ள அமராவதி நதிப்பாசனத்தைச் சேர்ந்த புலியூர் வாய்க்காலைப் புதுப்பிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுது அனைத்து வேலைகளும், 30—6—1975-ம் தேதியுடன், முடிக்கப்பட்டு விட்டன.

கூட்டுறவு நூற்பு ஆலைகள்

*** 55 வினா—திரு. கி. ஜெயராமன்** : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் கதிர்களை (spindles) அதிகப்படுத்த அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. கி. ஜெயராமன் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் அண்மையில் சிட்டு நூல் தயாரிக்கின்ற கூட்டுறவு நூற்பு ஆலைகளில் 50 ஆயிரம் கதிர்கள் ஏற்படுத்தக்கூடிய முறையிலே திட்டம் வகுத்து இருக்கிறது. சேலம் கூட்டுறவு நூற்பாலை போன்ற ஆலைகளில் அப்படி கொண்டுவருவதற்கு நம்முடைய அரசு மத்திய சர்க்காரின் அனுமதியைப் பெறுவதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அனுமதி பிரச்னையில்லை. அதற்கான நிதியைப் பெற என்.சி.டி.சி. இன்னும் புதிய கொள்கையை வகுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதிகக் கதிர்கள் போடும்போது அதிக உதவித் தொகை வேண்டுமென்று நாம் என்.சி.டி.சி.-யைக் கேட்டுவருகிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : மினி மில்கள் என்று சொல்லப் படுகின்ற மில்கள் குறைந்த கதிர்கள் கொண்டதாக உள்ளவை. நல்ல முறையில் நடத்தப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது, இப்போது ஆந்திர மாநிலத்திலேயும், கர்நாடக மாநிலத்திலேயும் மினி மில்கள் அமைக்கப்படவிருக்கின்றன. அங்கே அமைக்கப்பட விருக்கின்ற மினி மில்களைப் போல் இங்கேயும் நெசவாளர்கள் உள்ள பகுதிகளில் மினி மில்களை அமைத்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்க முடியுமே. அதனைப்பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, இருக்கின்ற நூற்பாலைகளைப்பற்றி.

1975 அக்டோபர் 25]

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு நூற்பாலைகளில் 12 ஆயிரம் ஸ்பின்டில்கள் ஓடுவதாலே செலவு அதிகமாகிறது. அதனால் நஷ்டம் ஏற்படுகிறது. நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அதிகமான ஸ்பின்டில்களை உண்டாக்கினால் செலவு குறையும். அதிகமாக ஏற்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. இதனால் பல ஆலைகள் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன. அதை விரைவில் பெறுவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா ஆலைகளுக்கும் இப்படியொரு திட்டம் கொண்டுவர படிப்படியாக முயற்சி செய்கிறோம். என்.சி.டி.சி. அதற்கும் பணம் கொடுக்கவேண்டும். மத்திய அரசாங்கம் இதைப்பற்றி கொள்கை முடிவு எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அண்மையில் நடைபெற்ற அமைச்சர்கள் மாநாட்டில்கூட தென் மாநிலத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் எல்லாம் இதைப்பற்றிக் கேட்டோம். அதற்கு மத்திய அமைச்சர், இன்னும் திட்டக் குழு, நிதி இலாகா இதுபற்றி முடிவு எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் விரைவில் நடவடிக்கை எடுத்தால் நாம் எல்லா ஆலைகளிலும் தொடங்குவதற்கு முயற்சிக்கலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கரூர் வட்டத்தில் மலைக்கோயிலூர் கூட்டுறவு நூற்பாலையில் அதிகமான கதிர்களை உருவாக்க வேண்டுமென்று திட்டமிருந்ததே, அது நிறைவேற்றப் படாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காரணத்தை இப்போதுதான் விளக்கினேன். 12,100 கதிர்கள் அதிகமாகப் போடவேண்டு மென்று திருச்சி கூட்டுறவு ஆலையைப் பொறுத்தவரையில் திட்டம் இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : When the minimum needs for a spinning Mill is 25,000 spindles, is there any proposal to start new mills without completing the 25,000 spindles in the existing mills?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு ஆலையைப் பொறுத்த அளவிலே இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இருக்கின்ற ஆலைகளில் 25 ஆயிரமாக ஆக்குவது முதல்கட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று எண்ணியிருக்கிறோம்.

[1975 அக்டோபர் 25

திரு. கே. டி. கே. தங்கமணி : இருக்கின்ற கூட்டுறவு ஆலைகளில் 25 ஆயிரம் ஊசிகள் வைக்கவேண்டுமென்ற முறையிலே எக்ஸ்பேண்ட் பண்ணிக்கொண்டிருக்கிறோம். இந்த ஆலைகளி லாவது சீக்கிரம் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 12 ஆலைகளில் திருவில்லிபுத்தூர், திருச்செந்தூர் ஆலைகளில் செய்வதற்குப் பணம் கிடைத்து இருக்கிறது. மத்திய அரசாங்கம் ரீபேட்ரியட்ஸ் ஸ்கீமுக்காக ஓரளவுக்குப் பணம் தந்தார்கள், அந்தப் பணத்தை வைத்துக் கொஞ்சம் செய்திருக்கிறோம். மீதியைப்பற்றி என்.சி.டி.சி.-யோடு பேசிக்கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : கூட்டுறவு ஆலைகளிலே ஸ்பின்டில்ஸ் அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அதே நேரத்திலே எவ்வளவு ஸ்பின்டில்ஸ் அதிகப்படுத்தினால் லாபகரமாக இருக்கும் என்று ஆராய்ந்து தீர்மானிக்கப்பட்டது போன்று 25 ஆயிரம் என்று சொல்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே மினி மில்கள் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அதையும் இதையும் ஒப்பிட்டுப்பார்த்து இது சிறந்ததா, அது சிறந்ததா என்று பார்த்து இதிலே நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இனிமேல் அதைப்பற்றி யெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் காலம் விரையமாகும். 25 ஆயிரம் என்று இருந்தால் நிர்வாகச் செலவு குறையும் என்று சொல்கிறார்கள். சில இடங்களில் 50 ஆயிரம் இருந்தால் குறையும் என்றும் தெரிவிக்கிறார்கள். நிர்வாகச் செலவு அதிகமாகாமல் இருப்பதற்கு 25 ஆயிரம் ஏற்றது என்று கருதுகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. Minister for Industries be pleased to state as to how many mills are there which are not having the economic level of 25,000 spindles and whether Government have collected statistics as to how many such mills are there working below 25,000 spindles, in Tamil Nadu?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாடு முழுவதும் உள்ள ஆலை களைப்பற்றியல்ல, கூட்டுறவு ஆலைகளைப்பற்றித்தான். 12-லே 2 நிறைவேற்றியிருக்கிறோம். மீதியுள்ள 10 ஆலைகளிலும் 25 ஆயிரம் ஆக்குகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம்.